வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 8.4.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- மக்களிடையே தொழில் முனைப்பை ஊக்குவிக்கும் வகையில், நாட்டின் தொழில் கடன் சூழலை, அரசு தொடர்ந்து வலுப்படுத்தும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- முத்ரா திட்டக் கடன்களில் வாராக் கடன், 3.5 சதவிகித அளவில், மிகவும் குறைவாகவே உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், இதுவரை 3 லட்சம் பயனாளிகள், முத்ரா திட்டத்தில் பயன் பெற்றுள்ளனர்.
- மணக்குள விநாயகர் கோவிலில் இன்று நடைபெற்ற, 27 நட்சத்திரங்களுக்கான கோமாதா பூஜையில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

முத்ரா-மோடி

பிரதமரின் முத்ரா திட்டம் தொடக்கப்பட்டு இன்றுடன் 10 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில், முத்ரா திட்டப் பயனாளிகளை சந்தித்து கலந்துரையாடினார். இத்திட்டம் கனவுகளை நனவாக்கி பயனாளிகளின் வாழ்க்கையில் முக்கிய மாற்றங்களை, கொண்டு வந்திருப்பதை பிரதமர் சுட்டிக்காட்டி, பயனாளிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

எண்ணற்ற தனி நபர்கள், இத்திட்டத்தின் நிதி ஆதரவு மூலம், தங்களின் தொழில் முனைவு திறன்களை வெளிப்படுத்தி இருப்பதாகவும், முந்தைய அரசுகளால் கண்டு கொள்ளப் படாத பிரிவினருக்கு இத்திட்டத்தினால் நிதி அதிகாரம் கிடைத்து இருப்பதாகவும், பிரதமர் கூறினார். நம்பிக்கையும் சுயசார்பும் உள்ளவர்களாக, இந்திய இளைஞர்களை மேம்படுத்துவதே முத்ரா திட்டத்தின் நோக்கம் என்றும், இந்தியர் எவருக்கும், எதுவும் அசாத்தியம் அல்ல என்பதையே, இத்திட்டம் நிரூபித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முத்ரா திட்டப் பயனாளிகளில், சுமார் 70 சதவிகிதம் பேர் பெண்கள் என்பதையும், சுமார் 50 சதவிகிதப் பயனாளிகள், எஸ்சி-எஸ்டி மற்றும் இதர பிற்பட்ட பிரிவுகளை சேர்ந்தவர்கள் என்பதையும், பிரதமர் சுட்டிக்காட்டி, முத்ரா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு கடனும், கண்ணியம், சுயமரியாதை மற்றும் வாய்ப்புகளின் சின்னமாகவே திகழ்வதாக கூறினார்.

நாட்டின் தொழில் கடன் சூழலை, அரசு தொடர்ந்து வலுப்படுத்தும் என்றும் தொழில் முனைவில் ஆர்வம் உள்ள ஒவ்வொருவரும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை எளிதில் அணுக இதனால் ஏதுவாகும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின் போது, முத்ரா திட்டப் பயனாளிகள், தங்களின் அனுபவங்களை பிரதமருடன் பகிர்ந்து கொண்டனர். பிரதமரின் முத்ரா திட்டம் குறித்து கூடுதல் விவரங்கள் ..............

(வாய்ஸ்)

<u>பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ், சிறு மற்றும் குறுந் தொழில் முனைவோருக்கு, 20 லட்சம் ரூபாய் வரையிலான வங்கி கடன், உத்தரவாதம் கோராமல் வழங்கப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் 52 கோடிக்கும் அதிகமான பயனாளிகள், மொத்தம் 32.6 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல், முத்ரா கடன் பெற்றுள்ளனர். மாநிலங்களைப் பொறுத்தவரை, நாட்டிலேயே தமிழகத்தில்தான், அதிகபட்ச அளவில் முத்ரா கடன் வழங்கப்பட்டுள்ளது. அதற்கடுத்த இடங்களில், உத்தரபிரதேஷ், கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன. யூனியன் பிரதேசங்களுக்கு இடையில், ஜம்மு-காஷ்மீர் முதலிடம் வகிக்கிறது. ஒவ்வொருவரையும் தொழில் முனைவோராக மேம்படுத்தும் முயற்சியில் முத்ரா திட்டம் முக்கிய பங்காற்றி வருவதை சர்வதேச செலாவணி நிதியம் அங்கீகரித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.</u>

***<u>முத்ரா வாராக் கடன்</u>***

முத்ரா திட்டக் கடன்களில், 3.5 சதவிகிதம் மட்டுமே வாராக் கடனாக உள்ளதாகவும், உலக அளவில் இத்தகைய தொழில் கடன் பிரிவில், இதுவே மிகக் குறைந்த வாராக் கடன் விகிதம் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று ஆங்கிலப் பத்திரிக்கைக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இதைத் தெரிவித்தார்.

முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது, அதிகார மையங்களுடன் நெருக்கமாக இருந்தவர்களுக்கு கடன் வழங்கப்பட்டதால் வங்கிகளின் வாராக் கடன்

அதிகரித்த நிலையில், முத்ரா திட்டம், வங்கிகளின் நிதி ஆதாரங்களை, அடித்தட்டு மக்களுக்கு மடை மாற்றம் செய்து இருப்பதாகவும், இதனால் வங்கித் துறையின் ஸ்திரத் தன்மை மாறாமல், அடித் தட்டு மக்களிடையே, தொழில் முனைவுத் திறன், படைப்பாற்றல், மற்றும் சுயசார்பு மேம்பட்டு இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான மக்களின் பயணத்தில், உத்தரவாதமாக, அரசு திகழும் என்பதே, முத்ரா திட்டம் மக்களுக்கு வழங்கும் செய்தி என்றும் அவர் குறிப்பிட்டார். பிரதமரின் பேட்டி குறித்து, கூடுதல் விவரங்கள்............ (வாய்ஸ்)

## முத்ரா வாராக் கடன்

ஆங்கிலப் பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில், வங்கித் துறை குறித்து பிரதமர் பேசுகையில், இந்திய வங்கிகளின் நிதி ஆரோக்கியம், வலுவாகவே உள்ளதாகவும், அரசின் பல்வேறு சீர்திருத்த முயற்சிகள் காரணமாக, பல வங்கிகள், இலாபத்தில், சாதனை அளவை எட்டி இருப்பதாகவும் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில், முத்ரா, ஸ்வாநிதி போன்ற அரசின் திட்டங்களால், வங்கிகளின் நிதி ஆரோக்கியம் மேம்பட்டு இருப்பதே உண்மை என்றும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்னும் இலக்கை எட்டுவதில், அரசின் கூட்டாளியாக வங்கித் துறை நீடிக்கும் என்ற நம்பிக்கை, தமக்கு இருப்பதாகவும், பிரதமர் மேலும் கூறினார்.

## துபாய்-மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், துபாய் பட்டத்து இளவரசரும், ஐக்கிய அரபு எமிரேட்டுகளின் துணைப் பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சருமான, ஷேக் ஹம்தான் பின் முகமது அல் மக்தூமுடன் உயர்நிலைக் கூட்டம் நடத்தினார். வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டது. 2 நாள் இந்தியப் பயணமாக இன்று புதுடெல்லி வந்துள்ள, ஷேக் முகமது அல் மக்தூம், இன்று மாலை மும்பை சென்று, வர்த்தகத் தலைவர்களின் வட்ட மேசைக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார். துபாய் பட்டத்து இளவரசர் என்ற முறையில் ஷேக் முகமது அல் மக்தூம் இந்தியா வருவது, இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத் தக்கது

*முத்ரா-புதுச்சேரி*

பிரதமரின் முத்ரா கடன் திட்டம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சிறப்பான முறையில் அமலாகி வருகிறது. மாநிலத்தில் இதுவரை 3 லட்சம் பயனாளிகள் முத்ரா திட்டத்தில் பயன் பெற்றுள்ளதாகவும், தற்போது 69 ஆயிரம் பயனாளிகள் மொத்தம் 791 கோடி ரூபாய் கடனை திருப்பி செலுத்தி வருவதாகவும், இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் திரு வெங்கட சுப்பிரமணியன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*மணக்குள விநாயகர்*

புதுச்சேரியில், புகழ்பெற்ற மணக்குள விநாயகர் கோவில் கும்பாபிஷேகம் முடிந்து 10-ஆம் ஆண்டுத் தொடக்க விழாவின் ஒரு பகுதியாக இன்று நடைபெற்ற, 27 நட்சத்திரங்களுக்கான கோமாதா பூஜையில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், மற்றும், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து நாளை காலை லட்சார்ச்சனை நடைபெற உள்ளது. மணக்குள விநாயகர் கோவிலில் லட்சார்ச்சனை நடைபெறுவது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத் தக்கது.

*ஆரோவில்*

புதுச்சேரியை அடுத்த ஆரோவில் ஆதிசக்தி கலாச்சார மையத்தில், அதன் நிறுவனர் வீனா பாணி நினைவாக, வரும் 13 முதல் 19-ஆம் தேதி வரை, கலை விழா நடைபெற உள்ளது. கஜல், மற்றும், சூஃபி இசை நிகழ்ச்சிகளும் நடன- நாடக நிகழ்ச்சிகளும், இவ்விழாவில் இடம் பெற உள்ளன. தினந்தோறும், நடிகர்கள் அமிர் கான், பிரபு தேவா, விஜய் சேதுபதி, தொவினோ தாமஸ் ஆகியோர், ஆன்-லைன் மூலமாக கலை நிகழ்ச்சிகளை தொடக்கி வைக்க உள்ளனர். ஆதிசக்தி கலாச்சார மையத்தின் கலை இயக்குநர் திரு வினய் குமார், இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்தார்.

*காரைக்கால்-தொழில்*

காரைக்காலில் தொழில் துறையின் செயல்பாடுகள் குறித்து, ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் தொழில் முனைவோர் கூட்டம் நடத்தப்படும் என்றும் நிலுவையில் உள்ள தொழில் முனைவோர் விண்ணப்பங்களின் நடப்பு நிலவரம் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும் என்றும் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. காரைக்கால் மாவட்ட

ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் இக்கூட்டங்களில் தொழில் முனைவோர் கலந்து கொண்டு தங்களின் குறைகளுக்கு தீர்வு காணலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ஏனாம்*

ஏனாமில், நகரப் பகுதி மற்றும் சாவித்திரி நகரில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளுக்கும், தரியல்திப்பா மைதானத்தில் கிரிக்கெட் ஆடுகளம் அமைக்கும் பணிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினர் திரு கொல்லப்பள்ளி ஸ்ரீனிவாஸ் அசோக், இன்று பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டினார். ஏனாம் நகராட்சி ஆணையர் திரு ராமகிருஷ்ணா மற்றும், பொறியாளர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மொத்தம் 51 லட்சம் ரூபாய் செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

*மோசடி-கைது*

ஐடி நிறுவனத்தில் வேலை பெற்றுத் தருவதாக கூறிய மோசடி நபர்களிடம் பணம் கொடுத்து ஏமாந்த புதுச்சேரி நபர் ஒருவரின் புகார் மீது போலீசார் நடவடிக்கை மேற்கொண்டு, நேற்று அரியானாவைச் சேர்ந்த இருவரை கைது செய்து, கூடுதல் விசாரணைக்காக புதுச்சேரிக்கு அழைத்து வந்துள்ளனர். இவர்கள் 2019-ஆம் ஆண்டு முதல், ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களிடம் பல கோடி ரூபாய் பண மோசடி செய்து இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. இதுகுறித்து கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் திரு நாரா சைதன்யா இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், போலியான கால் சென்டர்களை கண்டுபிடித்து மோசடி நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். வாட்ஸ்-அப் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலம், காவல் துறை, CBI மற்றும் TRAI அதிகாரிகள் போல ஏதேனும் அழைப்பு வந்தால் நம்ப வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

*வானிலை*

வங்க கடலில் நேற்று உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, இன்று, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக, மத்திய மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்தில் வடக்கு-வடமேற்கு திசையிலும், அதற்கடுத்த 24 மணி நேரத்தில் வடக்கு-வடகிழக்கு திசையிலும் நகர்ந்து, மத்திய வங்க கடல் பகுதியில், படிப்படியாக வலுக் குறையக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 14-

ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

***ஐபிஎல்***

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு சண்டிகரில் நடைபெறும் போட்டியில், சென்னை-பஞ்சாப் அணிகள் மோத உள்ளன. இன்று கொல்கத்தாவில் நடைபெற்று வரும் போட்டியில், லக்னோ அணியால் நிர்ணயிக்கப்பட்ட 239 ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி, இரண்டவதாக ஆடும் கொல்கத்தா அணி, சற்று முன் வரை, ------ஓவர்களில், ----- விக்கெட் இழப்பிற்கு, --------ரன் எடுத்து இருந்தது.

***ஊட்டச் சத்து வாரம்***

மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் துறை அமைச்சகம் போஷன் பக்வாடா என்னும் 7-ஆம் ஆண்டு ஊட்டச் சத்து இருவார விழாவை, இன்று முதல் கொண்டாடுகிறது. மக்கள் பங்கேற்புடன் கூடிய போஷன் பக்வாடா நிகழ்ச்சிகளில்

-- குழந்தை பிறந்த முதல் ஆயிரம் நாட்களில் சிறப்பு கவனம், --- குழந்தைப் பருவ உடல் பருமன் பிரச்சனைக்கு தீர்வு,

--போஷன் டிராக்கர் செயலியின் பயன்பாடு

உள்ளிட்ட அம்சங்களுக்கு முக்கியத் துவம் அளிக்கப்படுகிறது.

பிரதமரின் முக்கிய திட்டங்களில் ஒன்றான போஷன் அபியான் திட்டத்தின் கீழ், 6 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், வளர் இளம் பருவப் பெண்கள், கருவுற்ற தாய்மார்கள், மற்றும், பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலவரங்களை மேம்படுத்த சிறப்பு கவனம் செலுத்தப்படுவதும், குறிப்பிடத் தக்கது.

***பிஎஸ்என்எல்***

பொதுத் துறை பிஎஸ்என்எல் நிறுவனம், நடப்பு ஏப்ரல் மாதத்தை, வாடிக்கையாளர் சேவை மாதமாக கடைபிடித்து வருகிறது. சேவைத் தரம் மற்றும் நெட்வொர்க் தரத்தை மேம்படுத்தவும், வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளவும், வாடிக்கையாளர்களின் புகார்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், இந்த சேவை மாதத்தில் முக்கியத் துவம் அளிக்கப்படுகிறது. பிஎஸ்என்எல் வாடிக்கையாளர்கள் தங்களின் புகார்கள், கோரிக்கைகள், கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை, ஆன்-லைன்

மூலமான வாடிக்கையாளர் பின்னூட்டப் படிவத்தில் பதிவு செய்யலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.